சுருக்கம்

ஆட்சிமொழித் திட்டம் – அரசாணைகளும் கடிதங்களும் தமிழிலேயே அமைந்திடுதல் – தமிழ்மொழி பயன்பாட்டினை செவ்வனே செயல்படுத்த உறுதுணையாக ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை துணைகொண்டு செயல்திட்டம் உருவாக்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்(தவ1–1) துறை

அரசாணை (நிலை) எண்.41

நாள்: 20-2-2008
சர்வஜித், மாசி 8
திருவள்ளுவராண்டு 2039

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.1134, கல்வி (தமிழ் வளர்ச்சி) துறை, நாள்21.6.1978.
2) அரசாணை (நிலை) எண்.182, தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத்துறை, நாள் 27.6.1989.

-------

ஆணை:

ஆட்சிமொழிச் சட்டம் 1956இல் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆட்சிமொழிச் சட்டத்தின்படி தமிழ்நாட்டின் ஆட்சி மொழி தமிழ் மொழி மட்டுமே. சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்படும் விதிகள், விதிமுறைகள், ஆணைகள் மற்றும் விதிவிலக்கினங்கள் தவிர ஏனைய ஆணைகள் தமிழிலேயே பிறப்பிக்கப்பட வேண்டும். சட்டத்தின்கீழ்ப் பிறப்பிக்கப்படும் ஆணைகள், விதிகள், விதிமுறைகள், துணை விதிகளைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் தொடர்ந்து ஆணைகள் வெளியிடப்படலாம். எனினும், அவ்வாறான நேர்வுகளில் ஆங்கிலத்துடன் தமிழுக்கும் நிகர்நிலை தந்து அவ்வாணைகளின் தமிழாக்கம் கூடிய விரைவில் வெளியிடப்பெற வேண்டும். அதன்படி தலைமைச்செயலகத் துறைகள் ஆங்கிலத்தில் ஆணைகள் வெளியிடும் நேர்வுகளில் இனி தமிழிலும் ஆணைகள் வெளியிடப்பட வேண்டும். இவ்வாறு வெளியிடப்படுவதைத் தொடர்புடைய அரசுத் துறைச் செயலாளர்கள் முழுமையாகக் கண்காணிக்க வேண்டுமென்றும், அதிலும் விதிவிலக்கு அளிக்கப்பட்ட இனங்களுக்கு மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப்படலாம் என்று மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றம், அயல் நாட்டுத் தூதரகங்கள், நடுவண் அரசு, பிற மாநில அரசுகளுடனான கடிதப் போக்குவரத்துக்கள் மட்டும் ஆங்கிலத்தில் இருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ் நாடு அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரியும் அனைத்து அரசுப் பணியாளர்களும் அனைத்து இனங்களிலும் 21.6.1978 முதல் தமிழில் மட்டுமே கையொப்பமிடவேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது அரசாணைகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே வெளி வருவதாக பொதுமக்களும்,

தலைவர்களும் ஊடகங்களின் வழி தொடர்ந்து வெளிப்படுத்தி வரும்நிலை அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2. இது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரிடம் செயல்திட்டம் பற்றிய அறிக்கை கோரப்பட்டது. அவர் தனது அறிக்கையில், அரசாணைகளின்படி அரசு அலுவலகங்களில் பேணப்படும் பதிவேடுகள், கோப்புகள் அனைத்தும் தமிழிலேயே எழுதப்படுதல் வேண்டும். கடிதங்கள், ஆணைகள், காலமுறை அறிக்கைகள், பயணநிரல்கள், நாட்குறிப்புகள், பெயர்ப்பலகைகள், முத்திரைகள் முதலியன அனைத்தும் தமிழிலேயே அமைதல் வேண்டும் என்றும், அரசு அலுவலர்கள்/ பணியாளர்கள் தமிழிலேயே ஒப்பமிடுதல் வேண்டும் என்றும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட இனங்களுக்கு மட்டும் ஆங்கிலத்தைப் பயன்படுத்திக்கொள்ள விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது:-

(1) மைய அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்கு எழுதப்பெறும் கடிதங்கள்

(2) மேல்முறையீட்டுக்குட்பட்ட சட்டத் தொடர்புடைய ஆணைகள்

(3) வெளிநாட்டு நிறுவனங்கள், தூதரகங்கள் மற்றும் ஆங்கிலத்திலேயே செய்தித் தொடர்பு வைத்துக்கொண்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கொள்ளும் தொடர்பு

மேற்குறிப்பிடப்பட்ட வகையிலான விதிவிலக்கு இனங்கள் நீங்கலாகப் பிற அனைத்துச் செயற்பாடுகளும் அரசு அலுவலகங்களில் தமிழிலேயே அமைத்திடும் வகையில் தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆகியோரால் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் அரசு அலுவலகங்களின் நடவடிக்கைகள் பெருமளவில் தமிழில் அமைந்துள்ளன. இருப்பினும் தலைமைச்செயலகத்திலிருந்து வரும் அரசாணைகளும், கடிதங்களும் வேண்டப்படும் புள்ளிவிவரப் படிவங்கள் முதலியனவும் ஆங்கிலத்திலேயே இருப்பதாகவும், இவை தமிழில் அமைந்திட நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்து அவ்வப்போது கோரிக்கைகளும் செய்தித்தாள்களில் பேட்டிகளும் வருகின்றன. இந்நிலையில் அரசாணைகள் ஆங்கிலத்தில் வெளிவருவதைச் சுட்டிக்காட்டி நாளிதழ் ஒன்றில் செய்தி வெளிவந்துள்ளது. ஆட்சிமொழிச் சட்டம் மற்றும் அரசாணைகளுக்கிணங்க அரசால் வெளியிடப்படும் அரசாணைகள் கடிதங்கள் முதலியன (விதிவிலக்கு இனங்கள் நீங்கலாக) முற்றிலும் தமிழிலேயே அமைந்திட அரசு நிலையில் ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

3. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் பற்றி தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ள கருத்துக்களைச் செவ்வனே செயல்படுத்த உறுதுணையாக ஏற்கனவே ஆணையிடப்பட்ட அரசாணைகள் துணை கொண்டு கீழ்க்கண்டவாறு ஒரு செயல்திட்டத்தை உருவாக்கி அரசு ஆணையிடுகிறது:-

1. தலைமைச் செயலகத் துறைகளில் அரசாணைகள் தமிழில் மட்டுமே வெளியிடப்படல் வேண்டும். அவ்வாறு தமிழில் ஆணைகள் வெளியிடப்பட முடியாத இனங்களில் ஒவ்வொன்றிலும், தனித்தனியே அத்துறையின் மாண்புமிகு அமைச்சரிடம் அதற்கான விதி விலக்குப் பெற்று ஆணைகளை வெளியிடலாம். அவ்வாறு விலக்கு அளிக்கப்பட்ட

இனங்கள் பற்றிய குறிப்பு தமிழ் வளர்ச்சித்துறைக்கு ஒவ்வொரு திங்களும் அத்துறையின் செயலாளர் அனுப்பி வைக்க வேண்டும். ஆங்கிலத்தில் வெளியிடும் அரசாணைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஆணைகளும் உடன் வெளியிடப்படல் வேண்டும். ஆங்கில ஆணைகள் தமிழில் மொழி பெயர்த்தபிறகு தேவைப்படின், அவைகளைத் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் மொழிபெயர்ப்பு பிரிவுக்கு அனுப்பி அதன் ஒப்புதல் பெற்று தமிழில் வெளியிடுமாறு கோரலாம்.

2. அதேபோல் மாண்புமிகு அமைச்சர்களுக்கு அனுப்பப்படும் சுற்றாணைக் குறிப்புகள் தமிழிலேயே இருக்க வேண்டும். அதிலும் தமிழில் வரையப்பட முடியாத சுற்றாணைக் குறிப்புகள் ஆங்கிலத்தில் இருக்கலாம். அவ்வாறு ஆங்கிலத்தில் சுற்றாணைக் குறிப்பு வரைய துறை அமைச்சரால் விலக்கு வழங்கப்படல் வேண்டும்.
3. துறை தலைமை அலுவலகங்களிலிருந்து அரசு மற்றும் பிற அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கருத்துரைகள் தமிழிலேயே இருத்தல் வேண்டும். அவைகளில் தமிழில் அனுப்ப இயலாத கருத்துரைகள் விதி விலக்கு பெற்று ஆங்கிலத்தில் அனுப்பப்படலாம். அந்த விதி விலக்கினை துறை செயலாளரே ஆணையிடலாம்.
4. தலைமைச் செயலகம் மற்றும் துறைத் தலைமை அலுவலகப் பயன்பாட்டிலுள்ள கணினிகள் அனைத்திலும், தமிழ் மென்பொருள் பொருத்தப்பட வேண்டும்.
5. துறைத் தலைமை அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் படிவங்கள் முடிந்தவரை தமிழிலேயே இருக்க ஆவன செய்ய வேண்டும். உதாரணமாக பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை போன்றவற்றில் உபயோகப்படுத்தப்படும் படிவங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.
6. மாதம் ஒருமுறை தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெறும் அனைத்துச் செயலாளர்கள் கூட்டத்தில் தமிழ் ஆட்சிமொழி பயன்பாடு பற்றி ஆய்வு செய்யப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இல.கா.திரிபாதி,
தலைமைச் செயலாளர்.

பெறுநர்
துறைச் செயலாளர்கள், சென்னை—9.
தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள், சென்னை—9.
செயலாளர், அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை—9.
(முகவரிக் கடிதத்துடன்)
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.

<u>நகல்:</u>
தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை—8.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
அனைத்து அமைச்சர்களின் சிறப்பு/முதுநிலை நேர்முக உதவியாளர்கள், சென்னை—9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.